**1.2.2020 :**

**அசல் வழக்கு எண்.** 385/2010

பி.வா.சா.2 பூமிநாதன்   வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கின் 2ம் பிரதிவாதி செல்லம் என்பருடைய மகளை நான் திருமணம் செய்துள்ளேன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியின் உடன் பிறந்தவர்கள் சின்ன செல்லம்,  பெரிய செல்லம், பாண்டி. தாவா சொத்தினை வாதியின் தகப்பனார் 1950 வருடம் கிரையம் பெற்றது சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. 2ம் பிரதிவாதி இந்த வழக்கில் என்ன எதிர் வாதம் செய்கிறார் என்றால் 55 செண்ட் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். எனது மாமனாருக்கு பாத்தியப்பட்ட சொத்தின் சர்வே எண்.188/7. மேற்படி புலம் முழுமையாக உள்ளது இன்று வரை உட்பிரிவு செய்யப்படவில்லை. 2ம் பிரதிவாதிக்க தாவா சொத்து பூர்வீக பாத்தியப்பட்டதாகும். 2ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் முணியான்டி. மேற்படி முணியான்டியுடன் பிறந்தவர் செல்லம். வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு பற்றி எனக்கு தெரியாது. வாதி ஆறுமுகத்தை தெரியும். 2ம் பிரதிவாதி இந்த வாதி  மீது ஏதேனும் வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு  தெரியாது. பிரதிவாதி தரப்பில்  அனுபவத்தை காட்டுவதற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணம் பற்றி எனக்கு தெரியாது என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளோம். 2ம் பிரதிவாதி எனக்கு மாமனார் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை =இல்லை.